# தடுமாறும் வினாக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வழிகள் ॥

| உழைக்கும் | உறங்கும் (அ) உழையா | பெயரளவு (அ) பாசாங்கு | இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் | முரண்தடை | உரிமைப் போலி | துணைக் கூட்டாளி | இளவர் |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு செய்வார்<br><br>தொழிலை நிர்வாகம் செய்வார்<br><br>**பணிபுரியும் கூட்டாளி** அல்லது **மேலாண்மை கூட்டாளி,** அல்லது **பொதுக் கூட்டாளி** என்று பெயர்.<br><br>பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும். | தொழிலில் முதலிடுவர்.<br><br>நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை.<br><br>**உறங்கும் கூட்டாளிகள்** அல்லது உழையா கூட்டாளிகள் அல்லது **முதலிடும் கூட்டாளிகள்** என அழைக்கப்படுவர். | முதலிடுவதுமில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதுமில்லை.<br><br>இவர் கூட்டாளியாக **தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து,** அதன் மூலம் கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள உதவுகிறார்.<br><br>இவருக்கு இலாபத்தில் பங்கு இல்லை.<br><br>வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார். | இக்கூட்டாளி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார்.<br><br>**நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார்.**<br><br>இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது.<br><br>ஆனால் மூன்றாம் நபருக்கு இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும். | ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லாமலிருந்து, **தன் நடத்தையின் மூலம்** தானும் அத்தொழிலில் ஒரு கூட்டாளி என்று **வெளியாரை நம்ப செய்த பின்** தான் கூட்டாளி அல்ல என்று பின்னர் அவர் மறுத்துக்கூறமுடியாது.<br><br>அவ்வாறு நம்பி நிறுவனத்திற்கு முன் பணம் அளிப்பவருக்கோ அல்லது நிறுவனத்தோடு ஒப்பந்தத்தில் ஈடுபடுவருக்கோ அவர் பொறுப்பாகிறார்.<br>அத்தகைய நபரே முரண்தடைக் கூட்டாளி என்றழைக்கப்படுகிறார். | கூட்டாண்மையில் கூட்டாளி அல்லாத ஒருவர் கூட்டாளியென விவரிக்கப்படும்போது தான் அவ்வாறு கூட்டாளி அல்ல என **அவர் மறுத்துரைக்க வேண்டும்.**<br><br>அவர் ஏதும் சொல்லாது அமைதி காத்திட்டால் அவரைக் கூட்டாளியென நம்பி அக் கூட்டாண்மையுடன் வணிகம் செய்யும் நபர்களுக்கு அவர் பொறுப்பாகிறார்.<br><br>அத்தகைய நபரே உரிமைப் போலிக் கூட்டாளி எனப்படுகிறார். | ஒரு கூட்டாளிக்கு கிடைக்கும் லாபத்தை **இன்னொரு நபர் பங்கிட்டுக் கொண்டால்** அந்நபர் துணைக்கூட்டாளி என்று அழைக்கப்படுகிறார்.<br><br>அத்துணைக்கூட்டாளிக்கு நிறுவனத்தில் எவ்வித உரிமையுமில்லை.<br><br>நிறுவனக் கடன்களுக்கு இவர் பொறுப்பேற்பதுமில்லை. | **18 வயதை பூர்த்தி செய்யாத** நபரை இளவர் என்கிறோம்.<br><br>ஆனால் நீதி மன்றத்தால் ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் **21 வயது வரை** அவர் இளவாரக கருதப்படுகிறார்.<br><br>சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது.<br><br>ஏனெனில் அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதி இல்லாதவர்.<br><br>ஆனால் அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் கூட்டாண்மையின் பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார். |

# தடுமாறும் வினாக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வழிகள் II

| வேறுபாடுகள் | தனி வணிகம் | கூட்டாண்மை | தனி வரையறை நிறுமம் | பொதுவரையறை நிறுமம் | கூட்டுறவுச் சங்கம் |
|---|---|---|---|---|---|
| உருவாக்கம் | தனி நபரால் | ஒப்பந்தத்தால் | சட்டத்தால் | சட்டத்தால் | சட்டத்தால் |
| குறைந்தபட்ச உறுப்பினர் | 1 நபர் | 2 நபர் | 2 நபர் | 7 நபர் | 25 நபர் |
| அதிகபட்ச உறுப்பினர் | 1 நபர் | வங்கித்தொழில் 10<br>பிற தொழில் 20 | 50 நபர் | வரையறை இல்லை | வரையறை இல்லை |
| பொறுப்பு | வரையறாப் பொறுப்பு | வரையறாப் பொறுப்பு | வரையறு பொறுப்பு | வரையறு பொறுப்பு | வரையறு பொறுப்பு |
| சட்டம் | இல்லை | 1932 | 1956 | 1956 | 1912 |
| வாழ்வு | மிகக் குறுகியது | குறுகியது | நீடித்தது | மிக நீடித்தது | மிக நீடித்தது |
| இலாபம் | அவருக்கு மட்டும் | ஒப்புக்கொண்ட வகிதம் | பங்கு அடிப்படை | பங்கு அடிப்படை | ஆதரவு அடிப்படை |
| முதல் | மிக மிகக் குறைவு | மிகக் குறைவு | குறைவு | மிக அதிகம் | அதிகம் |
| பங்கு மாற்றம் | வாரிசு | ஒப்பந்தம் | இல்லை | சட்டப்படி | திரும்பப் பெறுதல் |
| மேலாண்மை | அவரே | கூட்டாளிகள் | இயக்குநரவை | இயக்குநரவை | மேலாண்மைகுழு |
| கலைப்பு | எளிமை | ஒப்பந்தம் | சட்டப்படி | சட்டப்படி | சட்டப்படி |
| தணிக்கை | தேவையில்லை | விருப்பம் | கட்டாயம் | கட்டாயம் | அரசால் |
| பதிவு | தேவையில்லை | விருப்பம் | கட்டாயம் | கட்டாயம் | கட்டாயம் |

# தடுமாறும் வினாக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வழிகள் ॥

| காளை | கரடி | கலைமான் | முடவாத்து |
|---|---|---|---|
| பத்திரங்கள் எதிர்காலத்தில் **விலையேற்றம் பெறும்** என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது **தெஜிவாலா** என்றழைக்கப்படுகிறார்.<br><br>இவர் எதிர்காலத்தில் **அதிக விலையில்** பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார்.<br><br>ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்த வகை ஊக வணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார்.<br><br>இவர் **எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும்** என்ற மனப்பாங்கு கொண்டவர். | கரடி அல்லது **மண்டிவாலா** என்றழைக்கப்படும் ஊக வணிகர், எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் **விலைகள் வீழ்ச்சி அடையும்** என்று எண்ணுபவர்.<br><br>அப்பங்குகளைத் தற்போது விற்று பின்னர் அவைகளைக் **குறைந்த விலையில்** வாங்கும் எண்ணத்தில் செயல்படுவார்.<br><br>இவ்வகை ஊக வணிகர், பங்குகளைத் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தான் கொண்டிராத பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வார்.<br><br>ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.<br><br>அதேபோல ஒரு கரடி ஊக வணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.<br><br>ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் **பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.** | கலை மான் ஊக வணிகர் **முன்னெச்சரிக்கை உடையவர்.**<br><br>இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு கோரி விண்ணபபம் செய்வார்.<br><br>தனக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவற்றை முன்னமம் பெற்றுக்கொண்டு விற்று விடுவார்.<br><br>எந்த நிறுமங்களின் பங்கு வெளியீடு பொதுமக்களால் விரும்பப்படுகிறது, முனைமத்துடன் விற்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து அந்நிறுமங்களை தேர்வு செய்வார்.<br><br>ஒதுக்கீட்டுப் பணம் கட்ட அழைப்பு வருமுன்னரே பங்குகளை இவ்வகை ஊக வணிகர் விற்றுவிடுவார்.<br><br>இவர் **முனைம வேட்டையாளர்** என்றும் அழைக்கப்படுகிறார். | தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள **இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற** ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.<br><br>கரடி ஊக வணிகர் பின்னர் கொடுப்பதற்காகத் தற்போது பத்திரங்களை விற்பார்.<br><br>ஆனால் குறிப்பிட்ட நாளில் பங்குகளை வைத்துள்ள எவரும் அதை விற்க விரும்பாததால் எந்த விலையிலும் வாங்குவதற்கு எந்த ஒரு பங்கும் கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.<br><br>மேலும் பங்குகளை இவரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்தவரும் ஒப்பந்தத்தின் தீர்வைத் தள்ளி விரும்பாததால் இவ்வகை ஊக வணிகர் போராட வேண்டியதாகிறது. |